**இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவகத்தின் - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட உச்ச தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மோட்டார் வாகனம் ஒன்று மீள்மதிப்பிடப்பட்டு அவற்றின் பெறுமதி கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் சொத்துக்களின் புத்தகப் பெறுமதியும் பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கமும் உரிய கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிராமையால் சொத்துக்கள் கணக்கு ரூபா 1,500,000 ஆலும் பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கக் கணக்கு ரூபா 1,500,000 தொகையாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாள்முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தினால்

சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திற்காக பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்படாது அடுத்து வரும் ஆண்டு முதல் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதே இற்றைவரை தொடர்ந்து பின்பற்றப்பட்ட கொள்கையாகும் என 2011 யூன் 06 ஆம் திகதி தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) பணிக்கொடைக்கான ஒதுக்கக் கணக்கில் ரூபா 13,405 குறைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 ஆம் ஆண்டிலிருந்து நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களில் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையிடம் இருந்து பெறவேண்டிய திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானமாகக் காட்டப்பட்ட ரூபா 4,527,422 தொகை 8 ஆண்டுகள் கடந்திருந்தும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் போது பரிகம நிலையத்திற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையில் ரூபா 24,119 இதனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் முதலியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4:2:2 ஆம் பிரிவு | ஒரு மாதத்திற்கு ஒரு முறை பணிப்பாளர் சபைக் கூட்டம் கூட்டப்பட்டு நிறுவச் செயலாற்றல் மீளாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் 2010 ஆம் ஆண்டிற்காக 04 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மட்டும் கூட்டப்பட்டிருந்தன. |
| (ii) 6:5:3 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 5 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், 2009 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2011 ஏப்ரல் மாதம் அளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 5.1.3 ஆம் பிரிவு | ஆகக்குறைந்தது நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள், வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் |

சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபைக்கு 2010 செப்தெம்பர் 24 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சிற்கு 2011 பெப்ரவரி 08 அம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டிருந்தமை தாமதத்திற்குக் காரணமாகியிருந்ததென தலைவர் அறிவித்திருந்தார்.

(iv) 8.3.2 ஆம் பிரிவு

தலைவர் மாதாந்தப் படிப்பணத்திற்கு மாத்திரமே தகமைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாதாந்தப் படிப்பணத்திற்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 25,000 படி முன்னைய ஆண்டின் போது ரூபா 165,000 தொகையினையும் மீளாய்வாண்டின் போது ரூபா 300,000 தொகையினையும் பெற்றிருந்தார்.

(ஆ) 2008 யூலை 28 ஆந் திகதிய பீஈடீ /50 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி

(i) கடமை நிலையத்திற்கு வெளியே ஈடுபடுகின்ற விசேட கடமைகளுக்காக மட்டும் மேலதிக எரிபொருள் செலவினம் கோரப்பட முடியுமான போதிலும், நிறுவகத்தின் பணிப்பாளரால் ஓர் பாடநெறியில் கலந்து கொள்வதற்காகவும் வேறு தனிப்பட்ட பயணத்திற்காகவும் வழமையான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 100,900 பெறுமதியான மேலதிக எரிபொருள் பெறப்பட்டிருந்தது.

(ii) கடமை நிலையத்திற்கு வெளியே ஈடுபடுகின்ற விசேட கடமைகளுக்காக மட்டும் மேலதிக எரிபொருளுக்காக அமைச்சுச் செயலாளாரின் முன்னங்கீகாரம் பெறப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிறுவகத் தலைவரினால் 2010 பெப்ரவரி முதல் திசெம்பர் 31 வரை பெறப்பட்ட ரூபா 548,516

தொகையான மேலதிக எரிபொருள் செலவினத்திற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவருக்கு உரித்தான எரிபொருள் எல்லையின் கீழ் ரூபா 240,000 தொகையும் மேலதிக எரிபொருளுக்காக ரூபா 600,000 தொகையும் பெறப்பட்டிருந்தது. இம் மேலதிக எரிபொருள் செலவினை மேற்கொள்கையில் வழமையான கடமைகளுக்காகவும் மேலதிக எரிபொருட் செலவினம் பெறப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 778,960 பற்றாக்குறையானதுடன், அதற்கு எதிராக 2009 திசெம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்கான மிகை ரூபா 644,548 ஆக இருந்தது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிசார் விளைவுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 1,423,508 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. பின்வரும் விடயங்கள் மேலும் கண்டறியப்பட்டன.

(அ) நிறுவகத்தின் நடைமுறைச் சொத்துக்களுக்கும் பொறுப்புகளுக்கும் இடையேயான விகிதம் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் முறையே 0.88 மற்றும் 0.61 ஆன பெறுமதியினைக் கொண்டிருந்தன.

(ஆ) நிறுவகத்தின் திரண்ட நிதியம் தொடர்ந்து மறைப் பெறுமதியைக் காண்பித்ததுடன் 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை அதன் மறை மீதிகள் முறையே ரூபா 63,440,426 ரூபா 62,016,683 மற்றும் ரூபா 62,815,644 ஆகக் காணப்பட்டன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயற்திறன்

#### I. பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை பாடநெறிகளை நடாத்துவதில் மாணவர்களின் பங்குபற்றுகையின் செயன்முன்னேற்றம் கற்கைநெறி வருமானம், ஆலோசனைக் கட்டணச் செலவு என்பன பின்வருமாறு காணப்பட்டன.

| | பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| **பாடநெறி** | **2008** | **2009** | **2010** |
| தங்க ஆபரண வடிவமைப்புக்களை உருவாக்குதல் | 40 | 13 | 30 |
| தங்க ஆபரண உற்பத்தி | 53 | 50 | 18 |
| ஆபரணங்களுக்கு கற்களைப் பதித்தல் | - | 06 | 07 |
| தங்க ஆய்வு | 91 | 28 | 38 |
| இரத்தினக்கல் வெட்டுதலும் பட்டை தீட்டுதலும் | 188 | 41 | 55 |
| கெவுட கற்களை சூடாக்குதல் | 65 | 16 | 36 |
| இரத்தினக்கல் வர்ணங்களை தரப்படுத்தல் மற்றும் விற்பனை | 26 | 08 | 45 |
| கூட்டுத்தொகை | 463 | 162 | 229 |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| பாடநெறி வருமானம் | 5,597,000 | 2,614,000 | 2,397,000 |
| விரிவுரைக்கட்டணம் | 5,948,378 | 4,441,632 | 3,968,717 |

I. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது விரிவுரைச் செலவினத்தை உள்ளடக்குவதற்கு போதிய வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை. 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது வருமானத்தில் குறைவு முறையே 53% மற்றும் 57% ஆன பெறுமதிகளைக் கொண்டிருந்தன.

II. 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பயிற்சிக்காக மாணவர்களின் பங்குபற்றலில் முறையே 65% மற்றும் 50% ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

III. மீளாய்வாண்டின் போது 06 பாடநெறிகளுக்காக 375 மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 229 மாணவர்கள் அதாவது மதிப்பீட்டுப் பெறுமதியில் 61% மாத்திரமே பயிற்றுவிக்கப்பட்டிருந்தது.

IV. 2010 செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது 4 பயிற்சி நிலையங்களை வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நிலையம் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதிலும் பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

V. வரகாபொல பயிற்சி நிலையத்தில் இரத்தினக்கல் வெட்டுதலும் பட்டை தீட்டுதலும் மற்றும் இரத்தினக்கல் பாடநெறிகளை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித பாடநெறியும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

VI. பயிற்சிப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1995 யூலை 28 ஆம் திகதிய 882 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் மூலம் இந் நிறுவகத்திடம்

ஒப்படைக்கப்பட்ட 3 அதிகாரங்களின் கீழ் சுரங்க அகழ்வு, ஆபரணங்கள் தயாரிப்பு இரத்தினக்கல் வெப்பமூட்டலுக்கான முறை மற்றும் இரத்தினக்கல் வடிவமைத்தல் போன்ற துறைகளில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக இயந்திர உபகரணங்களை உற்பத்தி செய்தல் போன்றவை உள்ளடங்கலாக தொழிநுட்ப மற்றும் ஏனைய ஆலோசனைகள் வழங்கப்படுவதும் அதிகாரம் 5 இன் கீழ் செயலமர்வுகள், கருத்தரங்குகள் நடாத்துதல் மற்றும் உரிய தலைப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ஆகியவை தொடர்பான பத்திரங்களும் புத்தகங்களும் வெளியிடப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் அவ் அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரத்தினக்கல் சுரங்க ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டுச் செயற்திட்டம்

---

1995 யூலை 28 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 05 பந்தியில் இந் நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம் இலங்கை இரத்தினக்கல் கனியவள மெய்மையாய்வும் ஆய்வும் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்காக ஆய்வுகூடி வசதிகளும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தயார்ப்படுத்தப்பட்டிருக்கையில் 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான 4 ஆண்டுச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு ரூபா 36 மில்லியன் ஆன ஏற்பாடு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டிலிருந்து இச் செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த அந்த ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட சதவீதம் பின்வருமாறு காணப்பட்டன.

| ஆண்டு | மதிப்பீட்டுச் செலவினம் | உள்ளபடியான செலவினம் | மொத்தச் செலவினம் ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| 2007 | 9,000,000 | 186,044 | 2.06 |
| 2008 | 9,000,000 | 273,188 | 3 |
| 2009 | 9,000,000 | 270,471 | 3 |
| 2010 | 9,000,000 | 1,286,453 | 14 |

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை செயற்திட்டத்தின் உள்ளபடியான செலவினம் ரூபா 2,016,156 ஆனதுடன் இது தொடர்பான செலவினப் பகுப்பாய்வு பின்வருமாறு காணப்பட்டது.

| ஆண்டு | சம்பளம் மற்றும் மேலதிகநேர வேலை | வெளிக்களப் பரிசோதனைச் செலவினம் | வரைபடங்கள் கொள்வனவு செய்தல் | நிலத்தை துளையிடும் இயந்திர காட்சிப்படுத்தல் செலவினம் | ஏனையவை | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2007 | - | - | 154,750 | - | 31,294 | 186,044 |
| 2008 | - | 18,185 | 186,000 | - | 69,003 | 273,188 |
| 2009 | 59,105 | 4,100 | - | 107,923 | 99,343 | 270,471 |
| 2010 | 700,269 | 152,625 | 13,362 | 138,668 | 281,529 | 1,286,453 |
| | 759,374 | 174,910 | 354,112 | 246,591 | 481,169 | 2,016,156 |
| மொத்தச் செலவினத்தின் சதவீதமாக | 38% | 8.5% | 17% | 12% | 24% | |

இதன் பிரகாரம் அடிப்படை நோக்கங்களை எய்துவதற்காக 8% இலிருந்து 17% அளவினாலான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 33 இன் பிரகாரம் உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்தி செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அதன் பெறுமதி ரூபா 500 மில்லியனை விஞ்ச வேண்டும். எனினும் இச் செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 36 மில்லியனாகும். எவ்வாறெனினும் இச் செயற்திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பேரில் நிறுவகத்தில் 5 உத்தியோகத்தர்கள் முழுநேரமும் வேறு 5 உத்தியோகத்தர்கள் பகுதி நேர அடிப்படையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஈ) திறைசேரியின் முன்னங்கீகாரம் இன்றி வருடாந்த மூலதன நிதி ஏற்பாடுகளில் ரூபா 500,000 இலங்கை வங்கியின் தனியான கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. யூன் மாதம் இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் இவ் வங்கிக் கணக்கில் இருந்து 2010 யூலை மாதத்தின் பின்னர் ரூபா 78,872 தொகையான செயற்திட்டச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) இச் செயற்திட்டத்திற்கு அவசியமான இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய பொருள் கொள்வனவிற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை நிறுவகத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் நிதிஏற்பாடுகளில் ரூபா 15,872,172 தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தின் முன்னாள் சிரேஷ்ட முகாமையாளரால் செய்யப்பட்ட ரூபா 2,395,749 தொகையான தங்கம் மற்றும் வெள்ளி இருப்பின் மோசடி உள்ளடங்கலாக ஒன்பது குற்றச்சாட்டுக்களில் 6 இற்கு குற்றவாளியாக்கப்பட்டதுடன் உரிய தனி நபர் நியாய சபை அறிக்கை 2010 பெப்ரவரி 05 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இவ்

உத்தியோகத்தருக்கு தண்டனை வழங்கப்படுவது தாபன விதிக்கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் நிதி சார் நட்டத்தை அறவிடுவதற்காக கணக்குக் கூற்று ஒன்றுடன் குற்றச்சாட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரினால் 2010 மே 17 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. 2011 ஏப்ரல் 26 வரையும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இக் கணக்காய்வு அறிக்கையின் 3.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் செயற்பாடு 2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது முறையே 53% மற்றும் 57% ஆன வீழ்ச்சிகளையும் ஆய்வு நடவடிக்கைகள் மிகவும் குறைவான பெறுமதியையும் கொண்டிருந்த போதிலும் நிறுவகத் தலைவரினால் உயர் முகாமைத்துவத்தின் சம்பளம், செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது 24% ஆலும் 12% ஆலும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(இ) தலைவர் நிறுவகத்திற்கு வளத்திற்கு ஒரு தடவை மாத்திரமே சமூகமளித்த போதிலும் முழு நேர தலைவர் ஒருவருக்கு உரித்தான மாதாந்தக் கொடுப்பனவையும் எரிபொருட் கொடுப்பனவையும் பெற்றிருந்தார். இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்காக ரூபா 1,175,141 கூட்டுத்தொகையான கொடுப்பனவையும் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,200,000 தொகையினையும் பெற்றிருந்தார். தலைவர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக பிராந்திய பயிற்சி நிலையங்களுக்குச் செல்வதற்கு நேர்வதாக பதிலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக 2005 ஒக்டோபர் 04 ஆம் திகதி தனியார் நிறுவகம் ஒன்றுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிறுவகத்திற்காக சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் (பகல் இரவு 12 மணித்தியாலங்கள்

சேவைக்காக) பெறுவதற்கு உடன்பட்டிருந்தனர். 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை இந் நிறுவகத்தின் சேவையைப் பெற்றுக்கொண்ட போதிலும் உடன்படிக்கை புதுபிக்கப்படவில்லை. இரத்தினபுரி காரியாலயத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வருகைப் பதிவேட்டின் பிரகாரம் இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் சேவை வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகையில் 3 உத்தியோகத்தர்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. சேவை இலக்கம் அற்ற வருகை பதியப்படாத நபருக்காக 2008 யூலை 15 ஆம் திகதி முதல் 2010 திசெம்பர் 31 வரை ரூபா 559,911 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு பயிற்சி நிலையத்தின் காரியாலய உதவியாளரின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சேவை இலக்கம் அற்ற பாதுகாப்பு சீருடை அணிந்திராத பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு 2009 ஆம் ஆண்டிற்காக ரூபா 160,916 தொகையும் 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 241,500 தொகையுமாக ரூபா 402,416 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.4 அதிகாரம் அற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி நிறுவகத் தலைவரினால் 2009 மே 01 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் எச்எம் 1-1 சம்பளப் பிரிவின் 38,530 (1100x15) 55,030 சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 50,630 சம்பள நிலையில் இருந்த பணிப்பாளர் எச்எம் -2-3 சம்பளப் பிரிவின் 47,245 – (1310x12) 62,965 ஆம் சம்பள அளவுத்திட்டத்தின் 11 ஆவது சம்பள ஏற்றமான ரூபா 61,655 இல் வைக்கப்பட்டிருந்ததுடன் கணக்காளர் மற்றும் நிர்வாகமும் ஆளணியும் ஆகிய இரு உத்தியோகத்தர்கள் எச்எம் 1 – 1 சம்பளப் பிரிவில் ரூபா 25,640 (665x3-735x7-925x15) 46,655 சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 38,330 சம்பள நிலையிலிருந்து அச் சம்பளப் பிரிவின் ரூபா 28,370 – (735x6-925x15)46,655 சம்பள அளவுத் திட்டத்தின் 16 சம்பள

ஏற்றங்களின் முன்னிலையிலுள்ள ரூபா 42,030 ஆன சம்பள நிலையில் வைக்கப்பட்டிருந்தது. 2009 மே 01 ஆம் திகதி முதல் 2010 திசெம்பர் 31 வரை அதிகாரமற்ற மொத்தக் கொடுப்பனவின் கூட்டுத்தொகை ரூபா 368,500 ஆகக் காணப்பட்டது.

(ஆ) தலைவரினால் அவரின் விசேட புலனாய்வு கடமை நடவடிக்கைகளாகக் குறிப்பிட்டு புலனாய்வு உத்தியோகத்தர் (பாதுகாப்பு உத்தியோகத்தர்) மற்றும் சாரதி ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இவ் இரு உத்தியோகத்தர்கள் கடமைக்குச் சமூகமளிப்பது நிறுவகத்தின் அல்லது கிளைகளின் வரவுப் பதிவேட்டில் பதியப்பட்டிராததுடன் தலைவர் பிரிவினால் வழங்கப்பட்ட அறிக்கை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது புலனாய்வு உத்தியோகத்தருக்கு (பாதுகாப்பு உத்தியோகத்தர்) ரூபா 235,100 தொகையும் சாரதிக்காக ரூபா 165,240 தொகையுமாக ரூபா 400,340 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2007 ஆம் ஆண்டின் போது ரூபா 12,309,013 கிரயத்தை மேற்கொண்டு நிலம் துளையிடும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் 2010 ஆம் ஆண்டு வரை இவ் இயந்திரத்தினால் முறையான பயன் பெறப்பட்டிருக்கவில்லை. இவ் இயந்திரத்திற்கான இரு முன்னோடி பரிசோதனைகளுக்காக ரூபா 246,591 தொகையும் காப்புறுதிக் கட்டணத்திற்காக ரூபா 99,434 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.6 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) ஆளணித் தகவல்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான எண்ணிக்கை |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 15 | 15 |
| பதவிநிலை அல்லாத தரங்கள் | 24 | 15 |
| சிற்றூழியர்கள் | 18 | 11 |
| ஒப்பந்த / அமைய | - | 05 |
| மொத்தம் | 57 | 46 |

(ஆ) மீளாய்வாண்டின் போது பல்வேறு பதவிகளுக்காக ஒப்பந்த, அமைய மற்றும் பணி ஒப்படைப்பு அடிப்படையில் ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 595,799 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந் நியமனத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் இன்றியும் அந்த அந்த பதவிகளுக்குரிய தகமை ஆய்வுகள் இன்றியும் நிறுவகத் தலைவரினால் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2010 மே 18 ஆம் திகதிய சுற்றாடல் அமைச்சின் 02/04/04/29 1 ஆம் இலக்க மேலதிகச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் சகல ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவி உயர்வுகள் உடனடியாக செயற்படும் வகையில் இடைநிறுத்தப்படுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மிகையாக நிரந்த ஊழியர்களின் எண்ணிக்கை இருக்கையில் ( வெற்றிடங்கள் இன்றி) சாரதி, வெளிவாரி முகாமையா உதவியாளர்கள் மற்றும் வெளிவாரி பயிற்சி மேம்பாட்டு பதவிகளுக்காக 3 ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) நிறுவகத் தலைவரினால் பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் இன்றி பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்த 4 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அப் பதவி உயர்வு வழங்கப்படுகையில் தாபனவிதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவிற்கு

முரணாக பதவி உயர்வுக்கான சம்பளம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் குறித்த சம்பள நிலைக்கு மிகையாக ரூபா 148,407 தொகை 4 ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(உ) முகாமைத்துவ உதவியாளர் 2010 ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் நிகழ்ச்சித்திட்டங்கள் உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி நிறுவகத் தலைவரினால் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி பதில் கடமைச் சம்பளமாக ரூபா 35,857 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 மே 29 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஏ2/ஜீஜேஆர்ரீஜ ஆம் இலக்க கடிதத்தின் படி 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளை அமுலாக்கப்படுகையில் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4.3, 4.4 மற்றும் 4.5 ஆம் உப பிரிவுகளுக்கு முரணாக அனைத்து பதவியணியினரின் சம்பளம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையே 4% முதல் 100% வரையான கருத்தில் கொள்ளக்கூடியளவு விலகல் காணப்பட்டதால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சி நடவடிக்கைகள்

(ஆ) பாடநெறிகளை நடாத்துதல்

(இ) ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளலும் பதவியுயர்வுகளும்

(ஈ) பொருள் மெய்மையாய்வு

(உ) பாதுகாப்புச் சேவைகள் வழங்கல்

(ஊ) எரிபொருட் செலவினம்